Previous Date of examination : 03.11.2020

நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவாரூர்

**CC No.25/2020**

2022-ம் ஆண்டு நவம்பர் மாதம் 03 -ம் நாள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சி அ..சா. 65 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அரவிந்த்குமார் | வயது | 29 /2022 |
| தகப்பனார் பெயர் | பால்ராஜ் | ஜாதி | |
| தொழில் | தனியார் வேலை | மதம் | |
| ஊர் | கும்பகோணம் | தாலுக்கா | |

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :

(1) நான் தற்போது கும்பகோணத்தில் வசித்துக்கொண்டு தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். எனக்கு சாட்சி லதா என்பவரை தெரியும். எனக்கு ஆஜர் 1வது எதிரியை தெரியும். எனது அக்கா ஜெயந்திக்கு சாட்சி லதா பழக்கமானவர். சாட்சி லதாவின் மகனுக்கு நெருங்கிய உறவினர் சக்திவேல் மூலமாக கோர்ட்டில் வேலை வாங்கி தருவதாக சொன்ன விபரம் லதா மூலமாக எங்களுக்கு தெரியவந்தது. லதா எங்களிடம் சக்திவேல் எனக்கு நெருங்கிய உறவினர், நேர்மையானவர் அவரிடம் பணம் ரூ.2 லட்சம் கொடுத்தால் வேலை வாங்கி தந்துவிடுவார் என சொன்னார். ரூ.2 லட்சத்தில் முன்பணமாக ரூ.1 லட்சத்தை கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

(2) 2018 ம் வருடம் ஜனவரி மாதம் திருவாரூரில் உள்ள சக்திவேல் வீட்டிற்கு நான், எனது அக்கா ஜெயந்தி, எனது தாத்தா ராஜகோபால் ஆகியோர் வந்து எனக்கு கோர்ட்டில் வேலை வாங்குவதற்காக ரூ.1 லட்சத்தை சக்திவேலிடம் கொடுத்தோம். திருவாரூர், நாகப்பட்டிணம், கும்பகோணத்தில் கோர்ட்டில் வேலை இருப்பதாக சொன்னார். நாங்கள் பணம் கொடுத்தபோது சக்திவேலின் மனைவி, அவரது குழந்தைகளும் இருந்தார்கள். நான் சக்திவேலிடம் நீங்கள் அரசு வேலையில் இல்லாத நிலையில் எப்படி இதை செய்கிறீர்கள் என கேட்டபோது சக்திவேல் அவரது வீட்டில் கோர்ட்டில் வேலை பார்க்கும்

ஒருவர் குடியிருப்பதாகவும்,அவர் மூலமாக இதை செய்வதாகவும் சொன்னார். பணம் கொடுத்ததற்கு ஏதாவது அதாட்சி கொடுங்கள் என கேட்டதற்கு, அதாட்சி கொடுக்க இயலாது,லதா பணம் கொடுத்துள்ளார். நம்பிக்கையில் கொடுங்கள் என சொன்னார்.

(3) பணம் கொடுத்தபோது எனது பயோடேட்டா விபரங்களையும் நான் கொடுத்தேன். சக்திவேல் என்னிடம் என்ன வேலை செய்கிறீர்கள் என்று கேட்டார். சர்வீஸ் சென்டரில் வேலை செய்வதாக சொன்னேன். இந்த சம்பளத்தில் அடுத்த நிலைக்கு வரமுடியும், இதுபோன்று ஏதாவது செய்துதான் வரவேண்டும் என்று சொன்னார். அரசாங்க வேலை என்றால் நிறைய நடமுறைகள் இருக்குமோ என்று கேட்டதற்கு அதை சரிகட்டத்தான் இந்த பணம் என்று சொன்னார். மூன்று மாதத்திற்குள் வேலை வந்துவிடும் என்று நம்பிக்கையாக சொன்னார்.

(4) அதன் பிறகு மூன்று மாதம் கழித்து போன் செய்து கேட்டபோது பிராசஸ் ஆகிகொண்டிருப்பதாக சொன்னார். அதன் பிறகு சிறுது நாட்கள் கழித்து கேட்டபோது முக்கியமான நபர் லீவில் இருப்பதாக சொன்னார். பலதடவை கேட்டும் முறையான பதில் இல்லாததால் எனக்கு நம்பிக்கை இல்லாமல் போனது. அதனால் எங்களுக்கு சொல்லிவிட்ட லதாவிடம் கேட்டேன். அதற்கு லதாவும் எங்களிடமும் அதே பதில்தான் சொல்கிறார் என்று சொன்னார். அதன் பிறகு எதிரி சக்திவேலை தொடர்பு கொண்டபோது சரியான பதில் இல்லை. எனது அக்கா ஒருமுறை போன் செய்தபோது ஆவேசமாக எனது அக்காவை திட்டியுள்ளார். அதன் பிறகு நான் ஒரு முறை போன் செய்தபோது டிராவலில் இருப்பதாக சொல்லி போனை சுவிட்ச் ஆப் செய்துவிட்டார். லதாவும் அதன் பிறகு சக்திவேலிடம் கேட்டுக்கொள்ளுமாறு சொல்லிவிட்டார். அதன் பிறகு திருவாரூரி எஸ்.பி. ஆபீஸில் இருந்து போன் செய்தார்கள். வேலை சம்பந்தமாக பணம் கொடுத்தீர்களா என்று விசாரித்தார்கள். ஆமாம் என் சொன்னேன். அதன் பிறகு எஸ்.பி.ஆபீஸிற்கு விசாரணை போன போதுதான் என்னைபோல் பலநபர் பணம் கொடுத்து ஏமாந்த விபரம் தெரிந்துக்கொண்டேன். போலிசார் என்னைவிசாரித்தார்கள்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் தனிப்பட்ட முறையில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் பணம் கொடுக்கும்போது லதா என்னுடன் இல்லை. லதாவை எத்தனை வருடமாக தெரியும் என்றால் எனது அக்காவிற்கும், அம்மாவிற்கும்தான் தெரியும். எனக்க ஓரளவிற்குதான் தெரியும். எனது அக்காவை விசாரித்தால் லதாவை பற்றிய விபரம் தெரியவரும் என்றால் சரிதான். நான் எதிரி சக்திவேலை எப்படி நம்பினேன் என்றால்

லதா என்பவர் கேரண்டி கொடுத்தார், எதிரி சக்திவேலும் என்னிடம் நம்பிக்கையாக கொடுத்தார். எனக்கு நேரடியாக சக்திவேலை தெரியாது என்றால் சரிதான். எதிரி சக்திவேல் என்னிடம் நீதிமன்றத்தில் வேலை வாங்கிதருவதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொன்னார். நான் எதிரி சக்திவேலை பார்க்கவில்லை என்றும், அவரிடம் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும், சாட்சி சுரேஷ் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

போலிசார் என்னை விசாரித்தபோது முதல் விசாரணையில் சொன்ன விபரத்தைதான் சொன்னேன் என்றால்சரிதான். எனக்கு எதிரி சக்திவேலைதான் தெரியும் என்றால் சரிதான். எதிரி கோவிந்தலெட்சுமியை தெரியாது என்றால் சரிதான். சக்திவேல் என்னிடம் அவரது வீட்டில் குடியிருக்கும் கோர்ட்டில் வேலை செய்யும் நபர் மூலம் வேலை வாங்கி தருவதாக என்னை நம்பவைக்க வேண்டும் என்று சொன்ன பொய்யான தகவலை நம்பி நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2 வது எதிரி சம்பந்தமாக நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** - இல்லை.

ஒம்/-எல்.ரகுபதிராஜா,
நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.